[1987 நவம்பர் 16

திரு. மு. ராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஞ்சனூரில் இயங்குகின்ற இந்த மருத்துவமனையில் முழு நேர மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ? அதே நேரத்தில் ஒரு ஆண்டுக்கு எத்தனை ரூபாய்க்கு மருந்துகள் அங்கே செலவழிக்கப்படுகின்றன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மருந்தகம் ஆகும். அதுபற்றிய முழு விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஊராட்சி ஒன்றியம்தான் மருத்துவரை நியமிக்க வேண்டும்.

திரு. மு. ராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி சுமார் ஐம்பது கிராமங்கள் அடங்கியதாகும். அங்கே மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால்தான் இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையம் பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். 145 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க இருக்கிறோம். அப்போது இதைப்பற்றி எழுதிக் கொடுத்தால் அரசு பரிசீலிக்கும்.

இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்றல்.

121– (*வினா எண். 4515) திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா இடைக்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைகளில், ஆரம்பச் சுகாதார நிலையங்களில், டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். 6 படுக்கை வசதிகள் இருக்கின்றன என்று சொன்னாலும் கூட, அந்தப் பகுதியிலே ஒரே ஒரு மருத்துவமனைதான் ஒரு பஞ்சாயத்திலே இருக்கின்றது. அதிகமான வசதி செய்து கொடுக்க

1987 நவம்பர் 16]

முடியுமா என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியை நான் எழுப்பினேன். இனிமேலாவது அரசு அதிகமான டாக்டர்களை நியமனம் செய்யவும், படுக்கை வசதிகளைக் கூட்டுவதற்கும் ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதிகமான மருத்துவர்களை நியமிக்கின்ற யோசனை அரசிடம் இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற டாக்டர்களில் ஒரு டாக்டர் கூட அங்கே இல்லை. அங்கே நியமிக்கப்பட்டவர்கள்கூட லீவ் போட்டுவிட்டு போனதாகச் சொல்கின்றார்கள். ஆகவே தயவு செய்து தேவையான மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று சொன்னால் உடனே நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஏற்கனவே இந்த அவையில் சொல்லியிருப்பது போல பொதுவாக மருத்துவர்கள் குறைவாகத் தான் இருக்கின்றார்கள். இன்னும் ஏறத்தாழ 1500 மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். தமிழ்நாடு தேர்வாணைக் குழுவை கேட்டிருக்கிறோம். பட்டியல் வந்த பிறகு எல்லா இடங்களும் நிரப்பப்படும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே படுக்கை வசதிகள் என்னென்ன அடிப்படையில் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. 1964-லே ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் படுக்கை வசதிகள் கொண்டதாக மாற்றி அமைக்க வேண்டும் என்று பல்விதமான கோரிக்கைகளைக் கொடுத்து வைத்தோம். ஆனால் இன்னும் அப்கிரேட் பண்ணாமல் பழைய நிலையிலேயேதான் இருக்கிறது. குறைந்தபட்சம் 700 முதல் 1,000 வெளி நோயாளிகள் மருந்து வாங்கிக் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டச் சுகாதார நிலையங்கள் என்னுடைய கிள்ளியூர் தொகுதியில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 6 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்பச் சுகாதார நிலையத்தில் டாக்டர்கள் நோயாளிகளைத் தங்கவைத்து மருத்துவம் செய்வதில்லை. அந்த ஆறு கட்டில்கள் வேறு இடங்களுக்குத்தான் செல்கின்றனவே தவிர, அந்த ஆஸ்பத்திரியிலே கூட இருப்பதில்லை அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பார்வையிட்டால் நேரடியாக உணரமுடியும். ஆகவே ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தேவையான படுக்கை வசதிகள் கொண்டதாக அப்கிரேட் செய்வதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 16

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுக்கைகள் எங்கே போகின்றன என்று தெரியவில்லை. இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆரம்பச் சுகாதார நிலையத்தை மேல்நிலைச் சுகாதார நிலையமாக மாற்றும் பொறுப்பு அரசுக்கு உண்டு. நிதி நிலை சரியாகும்போது மத்திய அரசின் ஒப்புதல் பெற்று அதுபற்றி ஆவன செய்யலாம்.

தாலுக்கா அரசு மருத்துவமனைகளில் மனநோய்ப் பிரிவு.

122—(*வினா எண். 8331) திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளில் மன நோய் பிரிவு துவங்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தாலுக்கா அரசு மருத்துவமனைகளில் மனநோய் பிரிவு இன்னும் துவங்கப்படவில்லை. எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இப்பிரிவு ஏற்படுத்திய பின்பு நிதிநிலைக்கு ஏற்ப, தாலுக்கா மருத்துவமனைகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம்.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளில் எல்லாம் பல்வேறு பிரிவு நோய்களுக்கான மருத்துவ வசதிகள் உள்ளன. இதனால் ஏழையெளிய மக்கள் அங்கே வந்து இலவசமாக மருத்துவ சிகிச்சை பெறுகிறார்கள். இப்போதெல்லாம் கிராமங்களில் எங்கே பார்த்தாலும் ஒவ்வொரு கிராமத்திலும், வருடந்தோறும் 4, 5 பேர்களுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏழையெளிய மக்கள் சென்னைக்கு வந்து, தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அளவுக்கு நிதிவசதியில்லாதவர்களாக இருப்பதால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே ஏழையெளிய மக்களின் நலன் கருதி, அவர்களின் நலனுக்காகவே பாடுபட்டு வருகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெறும் வகையில் தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளில் எல்லாம் இத்தகைய சிகிச்சைக்கான பிரிவை ஏற்படுத்த முன்வருமா ?